www.tamilarangam.net

# தமிழீழ உதயமும் சர்வதேச அரசுகளும்

சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பில் இருந்து வட தமிழீழத்தையும் விடுவிப்பதில் விடுதலைப் புலிகள் பெற்று வருகின்ற தொடர் வெற்றிகளை நம்தேசத்துடன் சேர்ந்து தமிழீழ மக்கள் கட்சி கொண்டாடுகின்றது. ஆனையிறவிலிருந்து சிங்களப் படைகள் முற்றாக வெளியேறியதன் மூலம் தமிழீழத்தின் மீதான சிறிலங்கா அரசின் இராணுவ ஆக்கிரமிப்புப் பாத்திரம் முடிவை அண்மித்து விட்டது. இன்று முழுஉலகும் ஏற்றுக் கொண்டு விட்ட உண்மை இது. சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து ஏற்கனவே தென் தமிழீழத்தின் பெரும் பகுதியும் மத்திய தமிழீழத்தின் மிகப் பெரும் பகுதியும் விடுவிக்கப்பட்டாயிற்று. வட தமிழீழம் முழுமையாக விடுவிக்கப்படுகின்ற நாட்கள் நெருங்கி வருகின்றன. ஆக நமது தேசத்தின் சுதந்திரம் அரசியல் ரீதியில் அங்கீகரிக்கப்படுகின்ற கட்டத்திற்குள் நமது போராட்டம் நுழைந்து விட்டது.

சிறிலங்கா அரசின் இராணு ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலை பெறுவதற்கு நம்தேசம் நீண்ட தீரமிக்க போராட்டத்தை முன்னெடுத்து வந்துள்ளது. இதேபோன்று நமது தேச சுதந்திரத்தை அரசியல் ரீதியில் அங்கீகரிக்கச் செய்வதற்கு உறுதியுடன் போராட வேண்டிய கட்டத்தை இப்போது அடைந்திருக்கின்றோம். நமது சுதந்திரம் அங்கீகரிக்கப்படுவதற்கான இந்தப் போராட்டம் நீண்டதாகவும் கடினமாகவும் இருக்கும் என்பது தெளிவு. கேவலமாகத் தோற்றுப் போயுள்ள சிறிலங்கா அரசுக்கு பக்கபலமாக சில ஆதிக்க அரசுகள் ஏற்கனவே வெளிப்படையாகவே செயற்படத் தொடங்கிவிட்டன. இந்த யதார்த்த நிலையானது நமது சுதந்திரம் அரசியல் அங்கீகாரம் பெறுவதற்கு நாம் இன்னும் கடுமையாகப் போராட வேண்டும் என்பதை சுட்டி நிற்கின்றது.

50 ஆண்டுகளுக்கு மேலாக நாம் முன்னெடுத்து வந்துள்ள இப்பெருமைக்குரிய போராட்டம் இப்போது அதன் இறுதி இலக்கை நெருங்கிவிட்டது. பல ஆயிரக்கணக்கான நமது மக்களினதும் நமது இளஞ் சந்ததியினரதும் உதிரத்தாலும், அளப்பெரிய அர்ப்பணிப்புக்களாலும், தன்னலமற்ற தியாகங்களினாலும் வலிமை பெற்று வந்திருக்கின்ற நமது விடுதலைப் போராட்டமானது நமக்குரிய சுதந்திர அரசை நிறுவவிருக்கும் ஒரு கட்டத்தில், நமது சுதந்திரத்தை தடுப்பதில் இந்த ஆதிக்க அரசுகள் அரசியல் நயவஞ்சகத்துடன் செயற்பட்டு வருகின்றன.

நமது மக்களின் சுதந்திர வாழ்வைத் தடுப்பதற்கும், நமது மக்களை மீண்டும் சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்புக்குள் தள்ளிவிடவும் இந்த ஆதிக்க அரசுகள் முயற்சிக்கின்றன. அவமானகரமாக தோற்றோடிக் கொண்டிருக்கின்ற ஒரு ஆக்கிரமிப்புப் படையை பாதுகாக்க ஆதிக்க அரசுகள் முடிவு செய்துள்ள அரசியல் "விசித்திரத்தை" இந்த உலகம் இங்கும் காண்கின்றது.

தற்போதுள்ள உலக சூழலிலும், புதிய உலக ஒழுங்கிலும் ஆதிக்க அரசுகள் முற்றிலும் தமது நலன்களில் இருந்து, தமக்கு விரோதமான நாடுகளை பிளவுபடுத்தி வருகின்றன. அதேசமயம் தமது ஆதிக்க நலன்களை பலவீனப்படுத்தும் தேச விடுதலைப் போராட்டங்களை திட்டமிட்டு நசுக்கவும் முயல்கின்றன. இந்தவகையில், நமது மக்கள் சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பை தகர்த்து விடுதலை நோக்கி தீர்க்கமாக முன்னேறியுள்ள இந்த வேளையில் இவ்வாதிக்க அரசுகள் சிறிலங்கா அரசுக்கு ஆதரவாக வெளிப்படையாகவே செயற்படத் தொடங்கியுள்ளன. இராணுவ உதவி, இராணுவத்திற்கான மனிதாபிமான உதவி, பிராந்திய பாதுகாப்பு, சர்வதேச அக்கறை போன்ற கோஷங்களின் கீழ் இவ்வாதிக்க அரசுகள் சிறிலங்கா அரசிற்கு உதவியும் உதவவும் வருகின்றன. எமக்கான தீர்வை அறிவிக்கும் நடுவர்களாகவும் தமது தலையீட்டை செய்கின்றன.

இதுவரை காலமும் சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பின் கீழ் நமது மக்கள் அனுபவித்து வந்திருக்கின்ற அடக்குமுறைகள், அழிவுகள், இழப்புக்கள், துயரங்கள் குறித்து எத்தகைய

BM Box 4002, London.
WC IN 3XX, United Kingdom,
www.thamileelam.org,
e-mail:
tmk@freeserve.co.uk

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனுதாபத்தையும் இந்த ஆதிக்க அரசுகள் வெளிப்படுத்தவில்லை. இன்று தம் சொந்த வலிமையினால் தமது விடுதலையின் இறுதிக் கட்டம் வரை சாதித்திருக்கின்ற நமது மக்களின் சுதந்திர உணர்வு குறித்த எத்தகைய ஆதரவையும் இந்த ஆதிக்க அரசுகள் வெளிப்படுத்தவில்லை. மாறாக, வரலாற்றினூடாக நிறுவப்பட்டுள்ள மானுட விழுமியங்களை குழிதோண்டிப் புதைத்து விட்டு எம்மையொடுக்கும் இனவாத சிறிலங்கா அரசுக்கு ஆதரவாகச் செயற்படுகின்ற மானிட விரோத முடிவை இவை மேற்கொண்டுள்ளன.

நெருங்கிவரும் இப் புதிய தடைகளையும் நம்தேசம் உறுதியுடன் எதிர்கொள்ளும். நமது மக்கள் வீரத்தின் விளை நிலம். நமது மக்கள் விடுதலை உணர்ச்சியினாலும் சுதந்திர தாகத்ததினாலும் வார்க்கப்பட்டார்கள். வற்றாத தியாகமும் வான் முட்டும் அர்ப்பணிப்பும் நம் மக்களின் மரபுச் சொத்துக்கள். எத்தகைய அடக்குமுறைகளையும் இழப்புக்களையும் கொடுமைகளையும் தாங்கி மங்கா வலியுடன் விடுதலை சமைக்கும் உரம் பெற்றவர்கள் நம் மக்கள். தமது வீரத்தால் ஆற்றலால் தமது சுதந்திரத்தின் தலைவாயிலுக்குள் நுழைந்துள்ள நமது மக்கள் அதன் பரந்து விரிந்த பாதைக்குள் நிச்சயம் தம் பாதங்களை பதிப்பார்கள். தம்மை மீண்டும் ஆக்கிரமிக்கவும் அடக்குமுறைக்கு உட்படுத்தவும் சிறிலங்கா அரசும் ஆதிக்க அரசுகளும் மேற்கொள்கின்ற அத்தனை முயற்சிகளையும் தகர்த்தெறிந்து சர்வதேச சமூகங்களுடன் ஒரு சுதந்திர தேசமாய் நமது மக்கள் நிச்சயம் இணைவார்கள்.

நமது விடுதலைப் போராட்டம் சிறிலங்கா அரசிற்கும் அதன் ஆக்கிரமிப்பு படைகளுக்கும் எதிரானதே தவிர வேறு எந்த அரசுக்கும் எதிரானதல்ல. நமது விடுதலை எந்த சமூகத்தினதும் எந்தத் தேசத்தினதும் நலன்களுக்கும் விரோதமானதல்ல. சர்வதேச சமூகங்களுடன் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் நம்மை இணைப்பதற்காகவே நாம் இதுவரை போராடி வந்திருக்கின்றோம். சுதந்திர தேசங்களுக்கு நடுவே இன்னுமொரு சுதந்திரத் தேசமாக வாழ்வதற்காகவே நாம் போராடுகின்றோம்.

நமது மக்களின் இந்த மாபெரும் விடுதலைப் போராட்டத்துடன் கைகோர்த்து நிற்கின்ற சர்வதேச சமூகங்களையும் முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர சக்திகளையும் நம் தேசம் எனறென்றும் நினைவு கூரும். தமது அரசுகளின் முடிவுகளையும் மீறி நமது சுதந்திரப் போராட்டத்துடன் தம்மை இறுகப் பிணைத்துள்ள பெருமைக்குரிய இம்மக்களினாலும் அவர்களின் தலைவர்களினாலும் நமது மக்களின் சுதந்திரம் விரைவில் சர்வதேச அங்கீகாரத்தைப் பெறும். எம்மை நோக்கி வாஞ்சையுடன் நீட்டப்படுகின்ற இந்த ஆதரவுக்கரங்கள் நாங்கள் உறுதியாகப் பற்றிக் கொள்கின்றோம்.

எமது சுதந்திரவேட்கையும், சுதந்திரத்திற்காக தம்மை அர்ப்பணித்தவர்களது தியாகமும், சர்வதேச நட்புசக்திகளின் ஆதரவும், உலக வரலாற்றிலிருந்தும் நாம் கற்ற அனுபவங்கள் என்பவற்றின் சேர்க்கையாக வலிமையுடன் சுதந்திரத் தேசமாய் நாங்கள் நிமிர்ந்து எழுவோம் - விரைவில்.

கொள்கைப்பரப்பு பிரிவு
தமிழீழ மக்கள் கட்சி
25-05-2000

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்